முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No**.7/2020

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 17.11.2023 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 17.11.2023 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | ஆனந்தன் | வயது.. | 53 |
| தந்தை பெயர்.. | கலியபெருமாள் | கிராமம்.. | மணலூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி..**

எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1993. திருமணம் ஆகும் போது நான் என்ன செய்து வந்தேன் என்றால் விவசாயம். எனது தகப்பனார் பெயர் கலியபெருமாள். எனது தகப்பனார் கலியபெருமாள் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது தாயார் பெயர் அலமேலு. நான் என் தகப்பனாருடன் வசித்து வருகிறேனா அல்லது தனியாக குடியிருக்கிறேனா என்றால் தனியாக தான் குடியிருக்கிறேன். நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் லால்புரம், மணலூர். என் வீட்டு கதவு எண்.577. நான் படித்துள்ளேனா என்றால் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. தமிழ், ஆங்கிலம் இரண்டும் எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் மட்டும் தெரியும். இந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர் வழக்குரை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன் ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. சாட்சி சொல்வதற்கு வரும் முன் வழக்கு ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் ஆஜரான பின் வேறு வழக்கறிஞர் மாற்றியுள்ளேனா என்றால் மாற்றியுள்ளேன். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 61/1, அதன் பின்பு உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண் மாறி உள்ளது.

3. புல எண்.61/3 ல் வாதி 21.09.1994ல் 1 ஏக்கர் 36 சென்ட் கிரயம் பெற்றுள்ளாரா என்றால் வாதி எவ்வளவு விஸ்திரணம் கிரயம் பெற்றுள்ளார் என்றா விவரம் எனக்கு தெரியாது, வாதி கிரயம் வாங்கிய தேதியில் தான் நானும் கிரயம்

பெற்றேன். 21.09.1994ல் வாதி கிரயம் பெற்ற அதே புல எண்ணில் தான் நானும் 97 செண்ட் கிரயம் வாங்கினேன். யாரிடம் இருந்து வாதியும் நானும் கிரயம் வாங்கினோம் என்றால் தமிழரசி அவருடைய கணவர் ராமசாமி. வாதியும் நானும் கிரயம் வாங்கிய பிறகு தமிழரசிக்கும் அவருடைய கணவருக்கும் கிரயம் கொடுத்த சொத்து பொறுத்து எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

4. கிரயம் வாங்கிய பிறகு கிரய சொத்துக்களில் வாதியும் நானும் எங்களுக்குள்ள இடத்தில் சாகுபடி செய்து வருகிறோம் என்றால் சரிதான். நான் 97 செண்ட் கிரயம் வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிரய பத்திரத்தை தவிர வேறு ஏதேனும் ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா. அந்த ஆவணம் தான் பி.வா.சா.ஆ.1. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன புல எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 61/3A 1A. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் பரப்பளவு ஆனது 39.27 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 39.27 ஏர்ஸ் என்பது எவ்வளவு செண்ட் என்றால் தெரியாது.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தான் வருவாய் பதிவேடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பளவில் நான் கிரயம் கொடுத்தது போக மீதி உள்ள நிலம் என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். புல எண்.61ல் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு இல்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரனாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் சொல்லப்படதா சங்கதிகளையும் என்னுடை எழுத்து மூல வாக்கு மூலத்தில் சொல்லியுள்னேன் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்தில் பைபாஸ் சாலைக்காக முதன்முதலில் கையப்படுத்தப்பட்ட வருடம் தெரியுமா என்றால் தெரியாது. எப்போது நெடுஞ்சாலை விரிவாக்கம் செய்யப்பட்டது என்றால் தோராயமாக 2018. முதன்முதலில் நிலத்தை கைகப்படுத்தும்போது நான் நஷ்டஈடு எதாவது பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை, விரிவாக்கம் செய்யும் போது தான் என் நிலத்தை கையகப்படுத்தினார்கள். என்னுடைய சொத்தில் எந்த புல எண்ணில் எவ்வளவு பரப்பளவு அரசாங்காத்தால் கையகப்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. கையகப்படுத்தப்பட்ட சொத்து தொடர்பாக ஆவணம் நெடுஞ்சாலை துறைக்கு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

7. அந்த சொத்து தொடர்பான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது போன்று ஆவணங்கள் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கறிகாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.11-ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.11- ல் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சமாதானம் ஆகிவிட்டோம் என்று வா.சா.ஆ.11 ல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் சமாதானம் ஆகினோம் என்றால் எங்களுக்கும் பேசி முடித்துக்கொண்டு சமாதானம் செய்து வா.சா.ஆ.11 ல் ஆவணத்தை எழுதிக்கொண்டோம் ஆனால் அதன் பின்வு வனஜா அவர்கள் நெடுஞ்சாலை துறையில் புகார் கொடுத்தார் அதன் விளைவாக நானும் நெஞ்சாலைதுறைக்கு புகார் கொடுத்தேன்.

8. வா.சா.ஆ.13 ஆவணம் எனது தகப்பனார் எழுதியக் கடிதம் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணமானது எனது சகோதரி அனுப்பிய கடிதம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14 மேல்முறையீடு படி என்னிடம் நெடுஞ்சாலை துறை அதிகாரி ஏதேனும் விசாரணை செய்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.16 ஆவணத்தை பற்றி எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

9. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2 பக்கத்தில் 23 -ம் வரியில் "வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் அளந்து அத்து காட்டி ஆணையர் அறிக்கையையும் அதற்கான மனுவையோ இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதியுடைய வங்கி கணக்கிற்கு ரூபாய் 1,00,000/- கொடுத்துள்ளோம் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் 2ம் பிரதிவாதி தான் அந்த பண்ணை கொடுத்தார். ரூபாய் 1,00,000/- கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. ரூபாய் 1,00,000/- வாதியுடைய வங்கி கணக்கிற்கு அனுப்பவில்லை என்றாலும் கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வெகு நாட்களுக்கு முன்பே கூட்டு குடும்ப சொத்தை எனது தகப்பனார் விற்று அதில் இருந்து ரூபாய் 1,00,000/- த்தை வாதியிடம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்து பின்பு என்னுடைய சொத்தை வருவாய் அலுவலர் மூலம் அளந்து பார்த்தேனா என்றால இல்லை. வா.சா.ஆ.10 ஆவணம் தான் 3ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு

என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. என்னுடைய வாக்குமூலத்தில் வா.சா.ஆ.10 ஆவணம் வாதியால் போர்ஜரியால் தயாரிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, 3ம் பிரதிவாதி வாதிக்கு பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றும் எனக்கு தெரியாது. வாதிக்கு உரிமையான சொத்தையும் அதற்குண்டான தொகையையும் ஏமாற்றும் நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை :**

**-இல்லை-**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- S.Suganiya Sri
Principal District Munsif (FAC)
Chidambaram